உ

கடவுள் துணை

ஐயாயிரச்சித்துயென்னும்

# காலக்கியானக்கும்மி.



இவை

செஞ்சி-ஏகாம்பரமுதலியாரால் எழுதப்பட்டு

வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1898

உ

கடவுள் துணை.

ஐயாயிரச்சிந்துயென்னும்

# காலக்கியானகும்மி

## விநாயகர் துதி.

### விருத்தம்.

பூரணமாம்தருமநுக்கு மார்க்கண்டேயர்
புகன்றபடிக்கலியுகத்தின் புதுமைதன்னை
காரணமாய்க்கண்டவர்கள் மனங்களிக்க
கருதரியச்செந்தமிழால் கும்மியாக
பேரானமாஞ்செஞ்சிநகர் வாழ்வேளாளன்
பேசிடவேயிச்சரிதைப் பெருமையாக
வாரணமாமுகவனின் கமலப்பாதம்
வணங்கியேயென்றுந் துதிசெய்வோமே.

### கும்மி.

செப்பிடுங்கிரேதாயுகந் திரேதாயுகத்துடன்
சேர்ந்ததுவாபரி நல்யுகமும்
ஒப்புடன்சென்றபின் கலியுகம்பிறந்திட
ஓங்கும்புதுமைகேள் நேசர்களே
தருமமென்பது தாழ்வாகிப்பொல்லா
அகர்மமென்பது மேலோங்க
வறுமையாய்ப்பூமி பாரம்பெருகிட
• வாடிபூமிமாதுமேதுசெய்வாள்

தாங்கமுடியாவருமையோடுமப்போ, நாணேயிந்திரலோகஞ்சென்று, ஓங்கிக்குறைகளைச் சொல்லிப்புலம்பிட உத்தம இந்திரனுமே துணைப்பார். ௩

வாடுமனதை மிகத்தேற்றி அந்த, வானுலகோனுமே யப்பொழுது, தேடியே பிரமப்பதிதனக்கேசென்று, தீவிரமாகவே வந்தனராம். ௪

வந்தவுடன்பூமிமாதுப்புலம்பலை, வயனவர்க்கேட்டுமே யேது சொல்வார், இந்தக்ஷணமே வைகுண்டப்பதிக்குநாம், வருவோமென்றே பயணமிட்டார். ௫

இந்திரனோடு வயன்பூமிமாதுவும், இன்னமுள்ளதேவர் யாவர்களும், விந்தையுள்ளப் பாரடிதனைக்கண்டுமே, வேண்டிக் குறைகளை விண்டனராம். ௬

ஆதிசிவனோடு தேவர்களுமின்னம், அடங்கலுமொன்றாய்ப் பயணமாகி, நீதியாமவைகுந்தமசேர்ந்தல்லவோவன்று, நெடியமாலோடுமுறையிடவே. ௭

அன்னைபூமிமாது துயரத்தைதீர்க்கவே, அன்புடன்மூவருமொன்றாகூடி, நன்னயமாக அவதாரஞ்செய்ததை நவிலுவேன்கேளுந் தருமனரே. ௮

காஸ்மீகர்தேசமாளுஞ் ஜெயசிங்குராஜன்மனைவியின் தன்வயற்றில், பாசமதாகவே ஆயனும்வந்தல்லோ, பாரெங்குமாளப்பிறந்தனராம். ௯

சங்கார்முனிகோடி பிராமணர்வீட்டிலே சனித்தார்சிதம்பரதீக்ஷிதரும பொங்கமுடனாரன் அவதாரஞ்செய்தபின், பிரமனுத்திடும் வாறதைக்கேள். ௰

இராமநகரத்தில் பிராமயோகியாக, நலமுடன்அவதாரந் தானுஞ்செய்து, காரணமாகவே யிருக்குமோர்நாளிலே, கருதியநாரதர்யேதுரைப்பார். ௰௧

கண்டிடுங்காஸ்மீரதேசத்திலே இங்க, காசினியாளவோர் புத்திரனும், விஷ்ணுவுஞ்சென்றுஅவதாரஞ்செய்ததை, விளங்கவேகண்டுமனமகிழ்வீர். ௰௨

யென்றுநாரதர் உரைத்திடவேயப்போ, யேகினார்தீட்சதர்யோகியுமே, நன்றெனமூவருமொன்றாகச்சேர்ந்தபின், நடக்கும்விதங்கேளும் தருமனரே. ௰௩

உன்னிதமாக அவதாரஞ்செய்துபின் ஓங்கும்ரிஷிகள் புகழும்பெற்று, ஐந்நூறுகோடி பூமண்டலம்யாவும், ஆண்டுவருகுமோர் நாளையிலே ௰௪

வீரபோகவசந்தராயனென்று, விளங்கியுலகையாளுகையில், காரணமாகவே பூமிபாரந்தீரக், கழறும்வகைகேளும் நேசர்களே ௰௫

சித்தமதாகவே யின்னஞ்சிலநாளில், சிறந்திடும் பூவுலகத்தினிலே, மத்தியேயான்வரும்போது துஷ்டர்களும், படும்பாடதை விபரீதஞ்சொல்லுவேன்கேள். ௰௬

மலையின்சிகரத்தி லுண்டாகும்பெரு, மக்கினியாலே வெகுஜனங்கள் நலிந்துவெந்துபின் மரணமதாகிடும் நாட்டிலுள்ளோரே யறிந்திடுவீர், ௰௭

மல்லிகார்ஜுனசுவாமியவர், நரபளிகளுடனே பேசுதலால், அல்லவோடுசிலர் அதினால் நசிவாரார், அடுத்தமேதோர் காஞ்சியின் சேதியைக்கேள். ௰௮

காமாக்ஷியால் தென்தேசநலிந்திடும். காளியால் கர்நாடதேசம் பாழாம், வீரியதுற்கியால் துலுக்கர்மரணமாம், வீரபத்ரர் தமிழ்தேசம்பாழாம். ௰௯

நாகேந்திரனாலே நந்திராஜ்ஜியம்பாழாம், நலமிலா துஷ்டர்க்கும் மரணமுண்டாம், கோலமதாகவே ஆகாயவாணியும், கூறுமதிசயஞ் சொல்லுவேன்கேள். ௨௰

வீரவசந்த ராயர்வாருமொன்று, விளங்கிடும்பெருஞ் சத்தமுடன், சிறியேகல்மழை பெய்தல்லோ வகு, ஜனங்கள் நசிந்திடும்நேசர்களே. ௨௧

பத்திரக்காளியும் மூரசுராஜியத்தை பாழ்ப்படுத்திக் கெடுத்துவிடும், சுத்தியேபயிரவர் சந்தெங்கும் நிறைந்துமே, மெத்தவுந்தொந்திரவாகிடுமாம். ௨௨

ஊழியெனும்விஷக் காற்றும்பெருகியே, உள்ளதோர் கட்டிப்பலப்பிணியால், தாழவிழுந்தும் படுத்தாப்போல்குந்தியும், தரணியில்வெகுபேர்கள் மடிகுவாராம ௨௩

அண்டத்தில்நாலுவால் வெள்ளிமுளைத்திடும் அதினால்சத்துரும்மரணமுண்டாம், விண்டிடுமாடு வாடுகள்தானுமே, விண்தனைப்பார்த்துமுறையிடுமாம், ௨௪

அண்டம்வெடிக்கிடும்வாறதுபோல்பூமி, அருஞ்சத்தத்தால் மரணமுண்டாம், கண்டிடும்பாதிராத்திரிதன்னிலே, காக்கைகள்மெள்ளவுங் கற்றிடுமாம் ௨௫

வானத்திலுள்ள நக்ஷத்திரம்யாவும், வாராகத்தோற்றும் பகலினிலே, ஊனமதாகவே நாலுதிக்கண்டமும், ஓசைக்கிளம்பியே நாசமுண்டாம். ௨௬

மந்தியெனும்பெருங் குறங்குகள்தானுமே, மலையாள தேசந்தனில்பேசும், விந்தையதாகவே வாரத்திற்கோர்விதர், விளங்குமதிசயம்மெத்தவுண்டாம் ௨௭

தாட்டுப்பத்திரியெனுந் தேசத்திலேஆடு, தானேயினையும்மனிதனைப்போல்; நாட்டமதாகவே ராமதுருக்கத்தில் வளருங்கிளிகியாயப்பேசிடுமாம். ௨௮

கும்பகோணத்தில் பசுவைகுலைசெய்வார். கோலகுண்டாவினில்கொக்குபேசும், கம்பநதியாங்காஞ்சிபுரத்தினில்தானும, கனத்தவுபத்திரமாகிடுமாம். ௨௯

குருமலைதனில்வளர் அருமங்கராயருட், கோபம்பெரிகியே கானுமப்போ, வரமதாய்நானுபனமரமும, வளர்த்திடுவாரென்றே யறிந்திடுவீர் ௩௰

திருப்பதிதனில்வளர் வெங்கடேசர்கோவிற், றேடிதலைக்கார்புகுவார்கள், விருப்பமாயங்குள்ள வாஞ்சனேயராலே, விண்ணதிரசத்தம்விளங்கிடுமாம. ௩௧

அந்தகல்லசத்தம்மண்ணும் நடுங்கியே, அடுத்ததுசல்தம்பந்தானுடைந்து, சிந்தைகலங்கவே நானுதிக்குமத், சிதறியே பூமிதனில்விழுமாம். ௩௨

திருவள்ளூர் வீரராகவசுவாமிக்கு தீண்டியேவேர்வை பிடித்திடுமாம் அருள்வளர்யமுனை கங்கைநதிகளும்அதிகமாய் வெள்ளமபெருகிடுமாம. ௩௩

மங்கையர்கண்களில் ரத்தம்விழுந்திடும் மரிக்ஷியாய் தாலுக்கர்கள் தானுமேதான், இங்கிதமாகவே யெங்கினும்கோரிகள் ஏகமதாகவேகட்டுவிரும். ௩௪

அமாவாசைதன்னில் சந்திரன் தோற்றுவன் அடுத்தஜாமம்நடுராத்திரியில் செம்மையாசுகதிரோனும்விளங்குவன் சேர்ந்தவாகாயஞ்சிகப்புமுண்டாம், ௩௫

பட்டணமெங்குமே ரத்தமழைப்பெய்யும் பசைத்தலட்சுமியழுகுவாளாம் பொட்டணவீரபோகவசந்தரும் புறப்படுமேசதி பெண்மாதுளைப்பாள். ௩௬

ஆகாயநக்ஷத்திரங்கள் விழுகவே, அதினால்பசுக்கள் மரணமுண்டாம் வேகமதாகவேயக்கினி கோறத்தால் வேணஜெனங்கள் நசிந்திடுமாம். ௩௭

விளங்கியகிருஷ்ண நதியருகேஒரு வேதியனென்னு மறையோன்வீட்டில் அத்திபெனனும் பெருங்கோளங்களாகிட அதற்கொருகோவுமே சாக்ஷிசொல்லும ௩௮

ஆறுபெருகியே நெல்லூர்பதிதனில் அடுத்தரங்கர்கோவில தான்முழுகும்வீரியமாகவே மூன்றுநாளும்பூஜைவிளங்காதென்றறிவீர்கள் நேசர்களே, ௩௯

பாரில்நடந்திடும் பாதச்சூடேறியே பற்றிடுமண்டையில் மேற்றவுமாம் சிரியேவதினாலே வேணஜெனங்களும் சேதமதாகிடும் நேசர்களே. ௪௰

தரிசிமலைக்கு வடகிழக்குமூலை தங்கியசேப்பலைதன்னெதிரில்
நிணைசையா யிச்சமரமதுஉண்டாகி நிலத்தில்வெட்டுவாண்டு படுத்தி
ருக்கும். ௪௧

பகலிலெழுந்துமே யிரவில்படுத்துமே பார்க்கசிராவணம் சுகப
திமூன்றிலே அகலவேயம்மறம் கிழவிழுந்திட ஆருங்கருப்பேயதுது
டங்கி. ௪௨

மதுரைமீனாட்சியும் வாய்திறந்துமல்லோ மனிதரோடுநின்றுப்
பேசுவாளாம் அதிரவேபகலில் நெருப்பிடியுண்டாகி அதினால்ஜனங்க
ள் மரணமுண்டாம். ௪௩

பார்க்கவேசிகப்பு எறும்புகளும்பெரு யானையைப்போலவே தா
ன்தோற்றும் மூர்க்கமுடன்மாயாசத்தி மனிதர்முன் மூரியேகின்ற
றுப்பேசிடுமாம். ௪௪

வராகன் வயற்றிலே யானைப்பிறந்திடும் வாறணம் மனிதனைப்
போல்யிணையும் பாகமதாகவே யாட்டுக்கைந்துதலை பார்க்கவதிசயமா
கிடுமாம். ௪௫

ஆணுடு மாண்பிள்ளையீன்றிடுமா மதற்கடுத்த நெல்வயலில்புளி
யமரம் தானுப்செழித்துமே பலவிதப்புஷ்பங்கள்சகலரும்பார்க்கவே
பூத்திடுமாம். ௪௬

கும்பகோணங் கோயில்தானழியுமந்த கும்பலிங்கேசர் கஞ்சிக்
குமேற்கில் செம்மையதாகவே வாணியன்தன்வீட்டில் ஜெனிப்பார்
காமதேனுவாலே ௪௭

காமாட்சிக்கண்களில் நீர்வடியுமந்த காரணத்தால்வெகுபேர்மர
ணம் காமனையெரித்திடுங் காளத்தியீசர்க்கு கலைகளுமாறுமென்றே
யறிவீர். ௪௮

அன்றுப்பிறந்திடும் பிள்ளைகள்பேசுமாம் அருந்த நல்லவெல்லந்
தான்கசக்கும் நன்றெனவேம்பினில் அமுர்தம்பெரிகிடும் நம்பிக்கை
யிதுவரி நேசர்களே ௪௯

அமாவாசைதன்னில் பேரிடிமுழங்கியே அதினால்நக்ஷத்திரமு
திரும் செம்மையதாகவே விக்கிரங்கள்யாவும் சித்திரநடனம புரிந்தி
டுமாம். ௫௰

மூன்றுகாலுள்ள கோவிலின்புற்றிலே மைந்தன்பிறந்துமே தா
ன்வளர்ந்து தோன்றியே வாதியாயுலகெங்கும்பேசுவன் தோகையா
ய்ப்பித்தளைப் பொன்னாகுமாம். ௫௧

பொம்மைகள் ராசங்கள்பாடிடுமாம் நல்லபொருந்திய வாகாயந்
தன்னிலையும் செம்மையாகப் பச்சைநிறமுள்ள மனிதரும் சிராகத்
தோற்றுமாம் நேசர்களே. ௫௨

பட்டணமெங்குமே ஐசுவரியத்தோடே பார்க்கவே க்ஷேமங்களாகிடுமாம் திட்டமதாகவே மேல்தேசப்பெண்களும் திரமதாகவே வாழ்வார்களாம். ௫௩

வடதேசப்பெண்களும் வெட்டுப்படுவரும் வழங்கியப் பொன்னதுப்பாழாகும் திட மிகிரவக்கிழனிலநசிந்திடுவாரின்னம் ஸ்ரீகள்புருஷரும் வொத்துவாழார். ௫௪

காசிதேசத்திளில் தானிருந்துவல்லோ காணவேபின்முக முள்ளவர்கள் தோஷமதாகவே தான்வாறதில் தொந்திரவாஞ் சிலாகதியில். ௫௫

பிரமத்துவாறமெனுநகரில் பூமிபாளும் ராமக்கிளியென்றறிவீர் அரிதுவாரத்தின் ஆலமரமீதில் அதிகவிநோதங்கள் தானுமுண்டாம ௫௬

காசிக்கடுத்ததோர் கண்டாகநியினில் காலமாய்வாழுஞ் சாலிகிராமம் கூச்சமில்லாமலே கடைகள்செய்துமே கூடிமனிதரேறுடுபேறிடுமாம் ௫௭

தேவரகசியம்யாவும் வெளியாகும் ஸ்ரீரங்கநாதரும் பேசிடுவார் தாவியேநதிகள் பிரண்டுக்கடலிலே தான்வந்துவிழுமாரி நேசர்களே.

குரங்குகள் சங்கீதம்பாடிடுமோமின்னம் குவலயமாம் பலதேசங்களில் வளங்கனதாகவே பணத்துக்கோர்மரக்கால் வளமாகதானியம்விற்றிடுமாம் ௫௯

வெள்ளைநிறக்காக்கை தானதுதோன்றியே வந்தமுதம்பலவூர்களிலே கொள்ளையதாக வதினாலே வெகுஜனம் குமிங்கிமடியுமாம் நேசர்களே. ௬௰

துஷ்டர்கள்ரத்த மூலகம்பெரிகிடும் கோனுமோர் வேலூருக்கோட்டையுந்தான் கஷ்டமதாகவே யிடித்துவதினாலே காணவெகுஜெனம்மாண்டிடுமே. ௬௧

ஆதிவிஷ்ணுவி னடிதொழுவீர் கெட்ட அஞ்ஞானி புத்தியை தான்விடுவீர் நீதியாமிந்தக் காலக்கியானகும்மி நித்தமும் வாசிப்பீர் நேசர்களே. ௬௨

முற்றிற்று.

உ

தேவிசகாயம்

நூறுவயதுவரையில்பல்விழாதிருக்கும்

# வச்சிரதந்தப்பல்பொடி.



இந்தப்பல்பொடியை 2-வருடத்து குழந்தைகள் முதற்கொண்டு புருஷர்கள் கிழவர்களும் தினகாலம் தாஙகள் பல்துவக்கும்போது கடசியில் இந்தப்பொடியில் கொஞ்சமெடுத்துத் துலக்கிக்கொண்டு வந்தால் 100-வயதுவரையில் பல்விழாது பல்கருக்காது ஒரு டப்பிவாங்கினால் ஒருவர்க்கு 2 - மாதம்வரையில் உபயோகமாகும் பல்அசைதல்-பல்குத்தல் - பல்யீருகள் வீக்கம்-சயித்தியத்தினாலாவது சீதளத்தினாலாவதுபல்லுநோய் சம்பவித்தவர்கள் காலைமாலை இரண்டுவேளையும் 3-நாள் துலக்கினால் பரிஷ்காரமாய் சகலநோயும் நிவர்த்தியாகும் அப்படி தவறினால் பணத்திற்கு ஜவாப்பு சொல்லுகிறேன் பல்லில்இரத்தமாவது சீழாவது வருகிறஜன்னிவியாதிக்கு நாள்படதுலக்கிவரவேண்டியது இந்தமருந்தை யெத்தனைநாள் வைத்திருந்தாலும் கெட்டுப்போகாது.

1—டப்பியின் விலை 0 4 0

10—டப்பி மொத்தமாய்வாங்கினால் 2 0 0

## ஒடுவாய்வுயெண்ணெய்.

கைகால்பிடிப்பு - கீலுகள்பிடிப்பு - மணிக்கட்டுகள்பிடிப்பு- ஒருநாளைக்கு ஒவ்வோரிடத்தில் மாரி-மாரி- நோயுண்டாகும் ஒடுவாய்வுகேப்படைகள் 5-நாள் அல்லது 7-நாளில்தீரும் கஷ்டமானபத்தியம்கிடையாது

1 அவுன்சு புட்டி விலை ... ... ... 1 0 0

2 அவுன்சு பெரியபுட்டி ... ... ... 1 8 0

## அக்கினிகுமாரச் சூரணம்

வாய்வு-நரித்தலைவாய்வு - பக்கவாய்வு- உஷ்ணவாய்வு-பித்தவாய்வு-பித்தமயக்கம் - மாாநோய்-கைகால்களில்குத்தல் குடைச்சல் இடுப்புநோய் மேச்சூடு இருமல் இன்னும் அனேகவியாதிகள் தீரும் கஷ்டமானபத்தியம் கிடையாது சகலரும்தின்னலாம்

1 டப்பியின் விலை ... ... ... 1 0 0

இப்படிக்கு

சிறுமணவூ - முனிசாமிமுதலியார்

சென்னபுரசை புதுமார்க்கட்டுக்கடுத்தபெருமாள் பேட்டை

வெங்கடேசபத்தன் தெருவு நெம்பர் 27.